மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த அளவுக்கு இப்பொழுது மாவட்ட மருத்துவமனைகள் போதுமான அளவுக்கு பெரிய அளவில் கட்டப்படவில்லை என்ற நிலையும், சரியான பெரிய அளவில் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலையும் இருக்கிறது. தனியாக குழந்தைகள் மருத்துவமனை கட்டுவது இப்பொழுது உள்ள சூழ்நிலையில் இயலாத காரியம். குழந்தைகள் வைத்தியத்தில் சிறப்பான பயிற்சி பெற்ற டாக்டர்கள் மாவட்ட மருத்துவ மனைகளில் இடம் பெறுவதற்கு அரசு ஆவன செய்து வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவ மனைக்குக் கூடுதல் கட்டடங்கள்.

* 28 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவமனையில் குருதி சேமிப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு எப்போது உத்தரவு இட்டது ?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) : 1971–72 நிதி ஆண்டில் திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவமனையில் குருதி சேமிப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டது.

(இ) அந்தக் கட்டடத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் அதிகமாக இருந்ததன் காரணமாக அதன் செலவினத்தைக் குறைப்பதற்காக திருத்திய மதிப்பீடுகள் கேட்கப்பட்டுள்ளது. திருத்திய மதிப்பீடுகள் கிடைத்தவுடன் கட்டட வேலை தொடங்கும்.

Meat Laboratory at Madras

* 29 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that a Meat Laboratory has been opened at the Veterinary College, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விவரமான அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 331-334-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.